தொகுதி மறுவரையறை: தமிழ்நாடெங்கும் கருப்புக்கொடிப் போராட்டம்!

விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, திருக்கோவிலூர் நகரத்தில் ஒன்றிய அரசு கொண்டு வரும் தொகுதி மறுவரையறை மசோதாவை எதிர்த்து விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதம்சிகாமணி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள். உடன் மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.செல்வராஜ், கோபிகிருஷ்ணன், குணா மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், தமிழ்நாட்டையும் தென் மாநிலங்களையும் வஞ்சிக்கும் நோக்கில் ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டுவரத் துடிக்கும் தொகுதி மறுவரையறை சட்டத்தைக் கண்டித்து, குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதி, நடுவீரப்பட்டு பகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி தோழர்களோடு கருப்பு உடை அணிந்து, கருப்புக்கொடி காட்டி கண்டன முழக்கம் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது. கூட்டணிக் கட்சித் தலைவர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரில் ஒன்றிய அரசைக் கண்டித்து சிவகங்கை மாவட்டச் செயலாளர், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கருப்புக் கொடி ஏற்றினார். உடன் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழுத் தலைவர் கொத்தமங்கலம் சேது மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படும் தொகுதி மறுவரையறைக்கான எதிர்ப்பை தெரிவித்து வடக்கு மாவட்டம். செஞ்சியில் உள்ள மாவட்டப் பொறுப்பாளர் தளபதி இல்லத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கருப்புக் கொடி ஏற்றிவைத்து தொகுதி மறுவரையறை மசோதா நகலை எரித்து ஒன்றிய அரசுக்கு கண்டனம் தெரிவித்தார். உடன் செஞ்சி ஒன்றியப் பெருந்தலைவர் விஜயகுமார், மேல்மலையனூர் ஒன்றியச் செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன், செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், மாவட்டக் கவுன்சிலர் அரங்க ஏழுமலை, நகரச் செயலாளர் கார்த்திக் மற்றும் பலர் உள்ளனர்.

தென்காசி புதிய பேருந்து நிலையம் அருகில் ஒன்றிய பா.ஜ.க. அரசின் தொகுதி மறுவரையறைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கண்டன ஆர்ப்பாட்டம் அனைவரும் கருப்பு சட்டை அணிந்த நிலையில் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, தென்காசி சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் டாக்டர் கலை கதிரவன், முன்னாள் மாவட்டச் செயலாளர்கள் பொ.சிவபத்மநாதன், மா.செல்லதுரை ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கழக சட்டத்துறை துணைச் செயலாளர் சூர்யா வெற்றிகொண்டான் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்தார். கண்டன உரையை தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஷேக்தாவுது வாசித்தார். இந்த ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய அரசின் சட்ட நகல் தீ வைத்து கொளுத்தப்பட்டது.

வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், மாவட்டச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார் தலைமையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களின் உரிமைக் குரலை நெரிக்கும் தொகுதி மறுவரையறை மசோதா நகலை எரித்து கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன. உடன் ஒன்றியச் செயலாளர்கள் ஞானசேகரன், கஜேந்திரன் மற்றும் மாவட்ட நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு நகரக் கழக அலுவலகம் முன் தொகுதி மறுவரையறைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நகரச் செயலாளர் ஏ.வி.சரவணன் தலைமையில் கறுப்பு கொடி ஏந்தி எதிர்ப்பு தெரிவிக்கபட்டது. உடன் நகராட்சித் தலைவர் தேவி பென்ஸ் பாண்டியன், நகர அவைத்தலைவர் பி.என்.எஸ்.ராஜசேகரன், எஸ்.ஆர்.பி.பென்ஸ் பாண்டியன், கே.சொக்கலிங்கம், ஏ.ஜி.ரவி, ருக்மணி, வி.விஜயகுமார், ஏ.கே.கஜேந்திரன், ஆர்.கோபி, ஏ.சிவா, முன்னாஆனந்த் மற்றும் ஐடி.விங் மலர்விழி ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிவகங்கை தெற்கு ஒன்றியக் கழகம் சார்பில் ஒன்றிய அரசைக் கண்டித்து தெற்கு ஒன்றியச் செயலாளர் எம்.ஜெயராமன் கருப்பு கொடி ஏற்றினார். தொகுதி மறுசீரமைப்பு மசோதாவை தீ வைத்து கொளுத்தினர். இதில் மாவட்ட மகளிரணி துணை அமைப்பாளர் மார்க்ரெட் கமலா, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து உட்பட ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.